CC 264/2017

27.06.2025.

அ.சா.8,

பெயர்: தங்கராஜ்

த/பெ. தண்டபாணி

அ.சா.8 கு.ப.ம.எண்.3824/2023-ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused Present. Accused counsel present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சி பழனிச்சாமியை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார். சிறப்பு உதவி ஆய்வாளர் எங்கு வைத்து விசாரித்தார் என்று எனது விசாரணையில் குறிப்பிடவில்லலையென்றால் சிறப்பு உதவி ஆய்வாளருக்குதான் தெரியும்.

சம்பவம் நடந்த சாலை போக்குவரத்து மிகுந்த சாலையென்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு அருகில் தருமகவுண்டர் தோப்பு, வெங்கடாச்சலம் மில் போன்றவை உள்ளன என்றால் சரிதான். இறந்துபோன நபர் வேலை செய்யும் கார்த்திக்கவுண்டர் வீடும் அந்த இடத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல.

கண்ணுற்ற சாட்சிகள் இவ்வழக்கின் இறந்துபோன நபரின் உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு அருகில் இருந்த சாட்சிகள் யாரையும் இந்த வழக்கில் உதவி ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லலையென்றால் சாட்சியம் அளிக்க யாரும் முன்வரவில்லை, அதனால் விசாரிக்கவில்லை.

கண்ணுற்ற சாட்சிகளாக இருக்க யாரும் முன்வராததால் இறந்துபோன நபரின் உறவினர்களை சாட்சியாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் வேலை செய்த கார்த்திக்கவுண்டர் போன் செய்ததன் மூலம்தான் அவர்கள் சம்பவயிடத்திற்கு வந்தார்கள் என்றால் அது பற்றி என்னிடம் எதுவும் கூறவில்லை.

சம்பவயிடத்திற்கு அருகில் இருந்த கார்த்திக்கவுண்டர் என்பதை இவ்வழக்கில் விசாரிக்கவில்லையென்றால் சரியல்ல. கார்த்திக் என்பவரை விசாரித்திருந்ததால் உண்மை தெரியவரும் என்பதால், அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுததவில்லையென்றால் கார்த்திக் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த சாலை கிழமேல் ரோடு என்றால் சரிதான். இறந்துபோன நபர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து தான் வேலை செய்யும் மில்லை பார்த்து திடீரென திரும்பியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லையென்றாலும், இறந்த நபரின் அஜாக்கிதையால் விபத்து

ஏற்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரி வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும், நான் சம்பவயிடத்திற்கே செல்லவில்லையென்றாலும் சரியல்ல.

வழக்கு என்னால் விசாரணை செய்யப்பட வேண்டிய ஒன்று என்றாலும், சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரணை செய்தது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றாலும் சரியல்ல, எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லையென்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.